**அனர்த்த முகாமைத்துவ நிலையம் 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

இடர்கள் முகாமைத்துவ நிலையத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக்

காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உடன்படிக்கையின் பிரகாரம் உரிய திகதியில் நிலையத்திற்கு படகு என்ஜின் விநியோகிக்கப்பட்டிருக்காமையால் நிலையத்தினால் அறவிடப்பட்டிருந்த ரூபா 1.82 மில்லியன் தொகையான தாமதக் கட்டணம் உரிய சொத்துக்களின் கிரயத்திற்கு எதிரீடு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தமையால் சொத்துக்களின் பெறுமதி அந்த பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | படகு என்ஜின்களை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட உள்ளபடியான செலவினம் ஆவது எம்மால் காசாக செலுத்தப்பட்ட பெறுமதியாகும். அதற்கமைய அந்த வள்ளங்களின் என்ஜின் விநியோகத்தருக்கு பணம் செலுத்தும் போது விநியோக தாமதக் கட்டணமாக ரூபா 1.82 மில்லியன் குறைத்து செலுத்தி காசினை சரியாக பதிவு செய்தல் எம்மால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சொத்துக்களின் நியாயப் பெறுமதி கணக்குகளில் வெளிப்படுத்தல் அவசியமானதாகும். |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதி | 2018 ஆம் ஆண்டின் இறுதியில் எமது | உள்ளபடியாக |

| | | |
|---|---|---|
| நிலையத்திற்கு பௌதீக ரீதியாக கிடைத்திருக்காத ரூபா 4.49 மில்லியன் கிரயமுடைய 29 மக்கள் அழைப்புத் தொகுதிகள் மற்றும் ரூபா 975,000 கிரயமான 25 ஹெட் செட்கள் நிதி நிலைமைக் கூற்றில் அலுவலக உபகரணங்களின் கீழ் சொத்துக்களாக காண்பிக்கப்பட்டிருந்தது. இவற்றுள் ரூபா 2.80 மில்லியன் கிரயமுடைய 17 மக்கள் அழைப்புத் தொகுதிகளின் பெறுகை நடவடிக்கைகள் 2019 சனவரி 30 ஆந் திகதி இரத்துச் செய்யப்பட்டிருந்தது. | நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாட்டினை பயன்படுத்துவதற்கு உரிய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு உரிய பொருட் கட்டளை கடிதங்கள் வழங்கப்பட்டிருந்தன. சில பொருட்கள் வழங்குநர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பிரகாரம் வழங்குவதற்கு தவறியமையால் குறித்த கட்டளைகளை பின்னர் இரத்துச் செய்ய நேரிட்டது. எவ்வாறெனினும், எதிர்காலத்தில் இவ்வாறான நிலமைகள் ஏற்படாதிருக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | கிடைத்திருக்காத சொத்துக்களினை கணக்கு வைப்பதன் மூலம் நிதிக்கூற்றுக்களில் உண்மையான மற்றும் நியாயமான நிலமைகள் வெளிப்படுத்தப்படவில்லை. |

### 1.5.2 பொருத்தமற்ற மதிப்பாயவுகள் மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் இடர்களை மட்டுப்படுத்தும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பாதீட்டு மதிப்பீட்டினூடாக ரூபா 480 மில்லியனான நிதியேற்பாடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்தந்த மாவட்டங்களினுள் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள செயற்திட்டங்கள் தொடர்பான விபரங்கள் இடர்கள் முகாமைத்துவ நிலையத்தின் செயல்நடவடிக்கை திட்டங்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2017 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட 15 செயற்திட்டங்களின் நிலுவைப் பட்டியல்களை தீர்ப்பதற்கு ஒதுக்கப்பட்ட ரூபா 20 மில்லியனான நிதியேற்பாடுகளும் அதில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், ரூபா 22.14 மில்லியனான நிலுவை பட்டியல்கள் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் தீர்க்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், நிலையத்தின் செயன்முன்னேற்ற அறிக்கையின் | பொதுத் திறைசேரியின் அறிவுறுத்தல்கள் பிரகாரம், முன்னைய வருடத்தின் நிலுவைப் பணங்களை செலுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டின் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. | (அ) நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள செயற்திட்டங்கள் தொடர்பான தகவல்கள் செயல்நடவடிக்கை திட்டங்களினுள் உள்ளடக்குதல் முக்கியமானதாகும்.<br><br>(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிலுவைத் தொகையை செலுத்துவதற்குரிய நிதியினை வேறாக பெற்றுக்கொள்ளுதல் மற்றும் மீளாய்வாண்டின் நிதியேற்பாடுகள் திட்டங்களுக்கமைய பயன்படுத்திக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் மூலம் நிதியத்தினை திறமையாக முகாமை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்கான 278 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா 474.43 மில்லியனான நிதியேற்பாடு மாவட்ட செயலகத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அதன் நிதியேற்பாடுகளில் ரூபா 361.49 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த நிதியேற்பாட்டில் 22 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 104.97 மில்லயன் தொகை அநுராதபுர மாவட்டத்தில் 93 செயற்திட்டங்களை நடைமுறைப்புடுத்துவதற்காக ஒதுக்கப்பட்டிருந்தமையின் காரணத்தால் நாட்டிலுள்ள மாவட்டங்களிடையே நிதியேற்பாடுகளை ஒதுக்கீடு செய்தல் பொருந்தாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. காலி மாவட்டத்தில் மீள குடியமர்த்தும் பணிகளுக்காக தெரிவு செய்யப்பட்ட அலுத்வத்த வீதியின் காணியின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 10 மிலலியனான நிதியேற்பாடு இடர்களை குறைக்கும் நோக்கங்களுடன் இணங்காத பணியொன்றாக அவதானிக்கப்பட்டது. | அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் குடிநீர் மற்றும் பயிர்ச்செய்கை கிணறுகளை புனரமைப்பதற்கு ரூபா 34 மில்லியன் அளவான தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டமையால் அநுராதபுரம் மாவட்டத்திற்கு செலவிடப்பட்ட நிதியேற்பாடு அதிகரித்திருந்தது. | உள்ளபடியாக இடர்களுக்கு முகங்கொடுக்கும் இடங்களை புனரமைப்பதற்காக நிதியேற்பாடுகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் அவசியமானதாகும். |
| (இ) | பல்வேறு அபாயத்திற்குள்ளான பக்கங்களை அபிவிருத்தி செய்தலின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 50 மில்லியனான நிதியேற்பாட்டில் மீளாய்வாண்டினுள் ரூபா 20.31 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன், அதற்கான மொத்த நிதியேற்பாட்டில் 59 சதவீதமான நிதியேற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்பார்க்கப்பட்ட பணிகளுக்காக நிதியேற்பாடுகளை பயன்படுத்டதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் அவசியமானதாகும். |

**1.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

------------------------------------------------------------------------------------------------------------

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2017 பெப்ரவரி 21 ஆந் திகதிய 2017/01 ஆம் இலக்க இடர் முகாமைத்துவ நிலையத்தின் சுற்றறிக்கை. | மக்களின் எதிர்ப்புகள் குறையும் வகையில் மற்றும் அவ்வப்போது திருத்தங்களை மேற்கொள்வதற்கு தேவையேற்படாத வகையில் செயற்திட்டங்களை தெரிவு செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | இந்த செயற்திட்டங்களை தெரிவு செய்யும் போது மக்களின் எதிர்ப்புகள் குறையும் வகையில் செயற்திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட உதவிப் பணிப்பாளர், பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலாளரினால் சான்றுபடுத்தப்பட வேண்டும். எதிர்காலத்தில் இந்த நிலமையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயற்திட்டங்களை தெரிவு செய்யும் போது மக்களின் கோரிக்கைகளுக்காக கவனம் செலுத்தல் அவசியமாகும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 33.32 மில்லியன் பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் பற்றாக்குறை ரூபா 7.32 மில்லியன் ஆகும். அதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா 26.0 மில்லியனான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டினுள் ஊழியர் ஊதியம் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இடர்களை குறைக்கும் செயற்திட்டங்களின் பணிகள் நிறைவடைந்தவுடன், உரிய மாவட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களால் உடன்படிக்கையின் பிரகாரம் | செயற்திட்டங்களின் பணி நிறைவு செய்வதற்குரிய அறிக்கைகளை அனுப்புமாறு மாவட்ட உத்தியோகத்தர்களுக்க அறிவிக்கப்பட்டுள்ளதுடன், 2019 யூன் 30 | பணி நிறைவு செய்யப்பட்டுள்ளதாக அறிக்கைகளை பெற்றுக்கொள்வதன் மூலம் அவற்றின் பௌதீக மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | வெற்றிகரமாக பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதாக பணி நிறைவு சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டினுள் நடைமுறைப்படுதத்தப்பட்டிருந்த மதிப்பீட்டு பெறுமதி ரூபா 333.92 மில்லியன் பெறுமதியான 202 செயற்திட்டங்களின் பணி நிறைவு அறிக்கைகள் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆந் திகதி வரையிலும் சுமார் 125 செயற்திட்டங்களின் பணி நிறைவு அறிக்கைகள் கிடைத்திருந்ததுடன், எஞ்சிய செயற்திட்டங்களின் இறுதி அறிக்கைகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதி செயன்முன்னேற்றத்தினை பகுப்பாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் திருத்தத்திற்காக தேவையான நடவடிக்கைகள் 2008 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும், உரிய திருத்தம் பாராளுமன்றத்தில் அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த அதிகாரச்சட்டத்தினை திருத்தும் பணிகள் இடர்கள் முகாமைத்துவ அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. | குறித்த அதிகாரச்சட்டத்தினை கால ரீதியாக திருத்தி அதற்கு பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதறகு நடவடிக்கை எடுப்பதன் மூலம் இடர் முகாமைத்துவ பணிகளில் சட்டரீதியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சென்தாய் சட்டகத்தின் பிரகாரம் இடர் அபாயத்தினை குறைக்கும் திட்டமொன்றினை தயாரிப்பதற்காக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழச்சித்திட்டத்தினூடாக 2015 ஆம் ஆண்டின் போது நிலையத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 1.30 மில்லியன் தொகையில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிலையத்தினால் ரூபா 318,582 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேற்படி திட்டத்தினை தயாரிக்கும் பணிகள் அமைச்சினால் நிறைவேற்றப்பட வேண்டும் என நிலைத்தினால் முன்னைய ஆண்டில் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அமைச்சினாலும் அவ்வாறானதொரு திட்டத்தினை தயாரிப்பதற்காக 2018 | சென்தாய் திட்டத்தின் பிரகாரம் இடர் அபாயத்தினை குறைப்பதற்காக வரைபாக்கப்பட்ட மூலோபாய திட்டம் அமைச்சினால் ஐக்கிய நாடுகளின் அமைப்பிற்கு 2019 யூன் மாதத்தின் போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கமைய இடர் முகாமைத்துவ திட்டங்களை தயாரிப்பதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | இலங்கை அனர்த்த முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் 8 ஆம் அத்தியாயத்தின் 2 (அ) பிரகாரம் நிலையத்தினால் தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன், இதற்காக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினூடாக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 02 மில்லியன் நிலைத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய 2018 – 2030 வரையாக காலப்பகுதிக்காக புதிய திட்டமொன்றினை தயாரித்தல் 2017 மார்ச் 07 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2019 யூன் 30 ஆந் திகதி வரையிலும் தயாரித்து நிறைவு செய்யப்பட்டுள்ள தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்த்தின் குறைபாடுகளை ஒழுங்கமைப்பதற்காக அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கமைய இடர் முகாமைத்துவ திட்டங்களை தயாரிப்பதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 நிதியங்களின் குறைப்பயன்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆம் ஆன்டின் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினூடாக 06 பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக கிடைத்திருந்த ரூபா 3.99 மில்லியனான தொகையானது மற்றும் சார்க் அமைப்பினால் முற்பணங்களாக 2015 ஆம் ஆண்டில் கிடைத்திருந்த ரூபா 1.75 மில்லியன் உரிய பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த பணத்தை ஈடுபடுத்தி எதிர்காலத்தில் உரிய பணிகளை நிறைவேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளது. | எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நிதியேற்பாட்டினை பயனிபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (அ) | நிலையத்தினால் 80 வள்ளங்களை விநியோகிப்பதற்காக 06 நிறுவனங்களுக்கு கேள்வி அழைப்பு பத்திரங்கள் அனுப்பப்பட்டிருந்த போதிலும், வழங்குநராக பதிவு செய்திராத 02 நிறுவனங்கள் அதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்தது. மேலும், தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் அறிக்கைக்கமைய வள்ளங்களின் பூட்டுகளை விநியோகிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைப்புக்குறிப்பீடுகள் நிறுவனத்தின் தேவைப்பாடுகளுடன் பொருந்ததாத 06 சந்தர்ப்பங்கள் இனங்காணப்பட்டிருந்தன. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.8 பந்தியின் பிரகாரம் வள்ளங்களின் விநியோகத்தரிடமிருந்து செயலாற்றல் பிணையொன்றினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், அதற்காக உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பெறுகைகள் பதிவேடுகளின் பிரகாரம் நிலையத்தினால் பெயரிடப்பட்ட இடங்களுக்கு வள்ளங்கள் விநியோகிக்கப்பட வேண்டியதுடன், ரூபா 9.92 மில்லியனான இணங்கிய கிரயத்தினுள் போக்குவரத்துக் கட்டணங்களும் உள்ளடங்கியிருந்த போதிலும், போக்குவரத்துக் கட்டணங்களாக ரூபா 675,155 ஆன தொகை மேலதிகமாக செலவிடப்பட்டிருந்தது. | (அ) | 2018 ஆம் ஆண்டின் போது இடம்பெற்ற வெள்ள அபாயம் காரணமாக பெருந்தொகையான வள்ளங்கள் தேவையானதாக உள்ளமையால் அவசர கொள்வனவொன்றாக இந்த பெறுகை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | (அ) | பெறுகைத் தேவைப்பாட்டினை துரிதமாக நிறைவேற்றக்கூடியவாறு மற்றும் செயற்திறனாக நிதியங்களை முகாமை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | | (ஆ) | இவ்வாறான வள்ளங்களை உற்பத்தி செய்யக்கூடிய நிறுவனங்கள் சொற்ப அளவில் காணப்படுவதால் அந்த நிறுவனங்களிடமிருந்து மாத்திரம் கொள்வனவு செய்தல் இடம்பெற்றுள்ளது. | (ஆ) | பிற்காலத்தில் ஏற்படக்கூடிய சட்டரீதியான சிக்கலை குறைத்துக்கொள்வதற்காக பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுத்தல் அவசியமானதாகும். |
| | | (இ) | தெரிவு செய்யப்பட்ட வழங்குநர் 2017 ஆம் ஆண்டின் போது விநியோகத்தினை மேற்கொண்டிருந்தமையால் செயலாற்றல் பிணை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | காணொளி தட்டொன்று பெறுகைகளுக்காக அமைச்சின் பெறுகைகள் குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டிராத போதிலும், போலியாக தயாரிக்கப்பட்டிருந்த பொருள் விநியோக கட்டளையொன்றினை அடிப்படையாக கொண்டு காணொளித் தட்டொன்றினை கொள்வனவு செய்வதற்கு 2018 திசெம்பர் 28 ஆந் திகதி ரூபா 12 மில்லியனை செலுத்துவதற்கு காசோலையொன்று வரையப்பட்டிருந்தது. நிலையத்திற்கு 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக கிடைத்திருந்த இந்த உபகரணம் 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் பதிவேடுகளில் உள்ளடக்கப்படாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. | பெறுகை பணிகளில் குறைபாடுகள் நிலவியமை அவதானிக்கப்பட்டது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டியதுடன், தேவையினை முன்கூட்டியே நிச்சயித்துக்கொள்ள வேண்டும். |
| (இ) | மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 13.95 மில்லியனான 149 மக்கள் அழைப்புக் கட்டளைகளின் பெறுகைகள் தொடர்பில் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.3 பந்தியின் பிரகாரம் எழுத்துமூல உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிராததுடன், செயலாற்றல் பிணையொன்றினை பெற்றுக்கொள்வதற்காக அமைப்புக்குறிப்பீடுகளுடன் இணங்காத வகையில் விநியோகிக்கப்பட்டிருந்த 29 மக்கள் அழைப்புக் கட்டளைகள் பிணையொன்றாக களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்குரிய உபகரணங்கள் | இடர்கள் முகாமைத்துவ நிலையத்திற்காக மக்கள் அழைப்புத் தொகுதிகளை கொள்வனவு செய்யும் தேவைப்பாடுகள் 03 இற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்தி பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதற்கமைய மக்கள் அழைப்புத் தொகுதிகள் ஒவ்வொரு தேவைப்பாடுகளுக்காக அதற்குரிய அமைப்புக்குறிப்பீடுகளுக்கமைய கொள்வனவு இடம்பெற்றது. அந்த தேவைப்பாடுகள் பின்வருமாறு ஆகும்.<br><br>-12 மக்கள் அழைப்புக் கட்டளைகள் பயிற்சி மற்றும் அறிவுறுத்தல் பிரிவற்காக<br>-17 மக்கள் அழைப்புக் கட்டளைகள் மாவட்ட அலகுகளுக்காக<br>-120 மக்கள் அழைப்புக் கட்டளைகள் அவசர தொழிற்பாட்டு பிரிவிற்காக.<br><br>இந்த பெறுகைகள் திணைக்களத்தின் பெறுகை அதிகார எல்லையினுள் மேற்கொள்ள முடியும் என்பதால் அதற்கமைய பெறுகை | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டியதுடன், குறைபாடுகளை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| களஞ்சியத்திற்கு கிடைத்ததாக கருதி ரூபா 9.10 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும், குறித்த உபகரணங்கள் 2019 மார்ச் 01 ஆந் திகதி வரையிலும் களஞ்சியத்திற்கு கிடைத்திருக்கவில்லை. | நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டுள்ளன. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8:9:3 இன் பிரகாரம் முறையான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிராத போதிலும், கொள்வனவு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அதன் 5:4:8 தொகுதி (அ) (ஆ) இன் பிரகாரம் நிறுவனத்திலிருந்து செயலாற்றல் பிணையொன்று பெற்றுக்கொள்ப்படாமைக்கு வழங்குநரினால் வழங்கல்கள் உரிய காலப்பகுதியினுள் வெற்றிகராமாக நிறைவேற்றும் நம்பிக்கையின் அடிப்படையில் ஆகும். அதற்கமைய பதில் வழங்கப்பட்டிராத மக்கள் அழைப்புத் தொகுதிகள் 120 இனை விநியோகித்த வழங்குநருக்கு பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் தொடர் இலக்கம் 5:4:13 இன் பிரகாரம் தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், உரிய பெறுகைகள் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்படாமையின் அடிப்படையில் 17 மக்கள் அழைப்புத் தொகுதிகளுக்குரிய பெறுகைகள் பின்னர் இரத்துச்செய்யப்பட்டிருந்தது. |

**4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்**

**4.1 ஆண்டறிக்கைகளை சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிலையத்தினால் 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான ஆண்டறிக்கைகள் 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய ஆண்டற்க்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | பாராளுமன்ற கணக்குகள் குழுக்களின் அவதானிப்புக்கு முன்வைக்கக்கூடிய வகையில் உரிய ஆண்டறிக்கைகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய சமர்ப்பித்தல் அவசியமானதாகும். |

**4.2 தீர்க்கப்படாதுள்ள சட்டரீதியான பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| (அ) | 02 மோட்டார் வாகனங்கள் செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் 05 வருட காலத்திற்காக பெற்றுக்கொள்வதற்காக 2017 திசெம்பர் 11 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை நிலையத்தினால் பக்கச்சார்பாக மீறப்பட்டமையால் ரூபா 15 மில்லியனான நட்டஈட்டுத் தொகையினை அறவிடுவதற்கு விநியோக நிறுவனத்தினால் நிலையத்திற்கு எதிராக மீளாய்வாண்டினுள் வழங்கு தொடரப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக நிலைத்திறகு எதிராக பல்வேறு நீதிமன்றங்களில் 07 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. | நிதிக்கூற்றுக்களின் மூலம் முன்வைக்கப்படும் நிறுவனத்தின் நிதி நிலமை மற்றும் நிதிச் செயலாற்றல் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் போது அந்த நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துவோரின் தீர்மானங்களுக்கு இந்த வழக்கின் தகவல்கள் தாக்கமொன்றினை ஏற்படுத்தாது என்பது எமது எண்ணமாகும். | நிறுவனம் முகங்கொடுத்துள்ள சட்டரீதியான பிரச்சினைகள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல் அவசியமானது ஆகும். |
| (ஆ) | வளிமண்டலவியல் திணைக்களத்திற்கு சொந்தமான காணியொன்றில் ரூபா 1034.0 மில்லியன் செலவில் நிலையத்தின் தலைமை அலுவலக கட்டிடம் 2010 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த காணி மற்றும் கட்டிடத்தினை நிலையத்திற்கு சட்டரீதியாக சுவீகரிப்பதற்குரிய பணிகள் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கட்டிடத்தினை இடர்கள் முகாமைத்துவ நிலையத்திற்கு சுவீகரிப்பதற்கு உரிய பணிகள் இடர்கள் முகாமைத்துவ நிலையத்தினால் 2014 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய இந்த கட்டிடம் அமைந்துள்ள காணியின் வரைபடத்தினை தயாரித்த பின்னர் உரிய காணித் துண்டு இடர்கள் முகாமைத்துவ நிலையத்திற்கு திறந்த கொடுப்பனவு பத்திரமொன்றினூடாக பெற்றுக்கொள்வதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. | உரித்து கையேற்கப்பட்டமையினூடாக அதன் பெறுமதியை கணக்கு வைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ‘‘நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களாலும் நடவடிக்கை | இன்றளவில் நோக்கங்கள் இனங்காணப்பட்டுள்ளது டன், அதற்கான மூலோபாயங்கள் தயாரிக்கப்பட்டவாறு | இது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுத்தல் அவசியமானதாகும். |

எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், மீளாய்வாண்டிற்குரியதாக இடர்கள் முகாமைத்துவ நிலையத்தினால் தமது விடயப்பரப்பிற்குரிய பணிகள் தொடர்பில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

உள்ளது. இது தொடர்பில நிலைபேறான அபிவிருத்தி அமைச்சுடன் கலந்துரையாடியதுடன், மூலோபாயங்களை இனங்கண்டதன் பின்னர் நிலைபேறான அபிவிருத்தி அமைச்சிற்கு ஆண்டு 2030 வரை அதற்குரிய வேலைத்திட்டங்களை நடைமுறைப்புடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.